# தண்டிக்கப்படுகின்றனவா தென் மாநிலங்கள்?

‘**வ**டக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது’ என்பது அண்ணாவின் முழக்கங்களில் முக்கியமானது. காலம் மாறிவிட்டது. இன்று தென் மாநிலங்கள் வளர்ந்துவருகின்றன. ஆனால், அந்த வளர்ச்சியின் காரணமாகவே ஒன்றிய அரசு தென் மாநிலங்களுக்கு உரிய நிதியை ஒதுக்குவதில்லை என்பதுதான் இப்போதைய குற்றச்சாட்டு. ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இந்தக் குற்றச்சாட்டை மறுத்தார். எல்லா மாநிலங்களுக்கும் நிதி ஆணையத்தின் (Finance Commission) பரிந்துரையின் படியே நிதி பகிர்ந்தளிக்கப்படுகிறது என்றார் அவர். அமைச்சரின் கூற்றை எந்த மாநில அரசும் மறுத்ததாகத் தெரியவில்லை. அப்படியானால், அவர் பேசியது சரியானது என்று எடுத்துக்கொள்ளலாமா?

**நடைமுறை என்ன? -**

நமது அரசமைப்புச் சட்டத்தின் 280ஆவது கூறு, ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நிதி ஆணையம் நிறுவப்பட வேண்டும் என்று விதித்திருக்கிறது. இந்த ஆணையம்தான், ஒன்றிய அரசு மக்களிடமிருந்து வசூலிக்கிற வரி வருவாயை மாநிலங்களுக்கு எவ்விதம் பங்கிட வேண்டும் என்று அறிவுறுத்துகிறது.

முதல் கட்டமாக வரி வருவாயிலிருந்து எத்தனை சதவீதம் மாநிலங்களுக்குக் கட்டாயமாக ஒதுக்கப்பட வேண்டும் என்றும், இரண்டாம் கட்டமாக அவ்விதம் ஒதுக்கப்பட்ட நிதியில் ஒவ்வொரு மாநிலத்துக்கும் எவ்வளவு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றும் ஆணையம் பரிந்துரைக்கிறது.

13ஆவது நிதி ஆணையம் (2010-15) மாநிலங்களுக்கு ஒதுக்கிய நிதி 32% மட்டுமே. 14ஆவது நிதி ஆணையம் (2015-20) இதை 42%ஆக உயர்த்தியது. இப்போதைய 15ஆவது நிதி ஆணையம் (2020-26, ஆறு ஆண்டுகள்) இந்த விகிதத்தைக் கூட்டவில்லை. 14ஆவது ஆணையத்தின் பரிந்துரைப்படி மாநிலங்களுக்குக் கிடைத்த மொத்த நிதியில் 10% கூடியிருக்க வேண்டும். ஆனால், அது அப்படி நடக்கவில்லை.

ஒன்றிய அரசு மாநில அரசுகளுடன் பகிர்ந்து கொள்ளத் தேவையற்ற சில ‘சிறப்பு வரி’ வகைகள் இருக்கின்றன. இவை ‘சிறப்பு மேல் வரி’ (செஸ்), ‘கூடுதல் மேல் வரி’ (சர்சார்ஜ்) என்று அழைக்கப்படுகின்றன. 2011-12 நிதியாண்டில் இந்தச் ‘சிறப்பு’ வகைமைகளின் கீழ் வசூலிக்கப்பட்ட வரி, மொத்த வரி வருவாயில் 10.4%ஆக இருந்தது.

2019-20ஆம் நிதியாண்டில் ஒன்றிய அரசு இதன் விகிதத்தை 20.2%ஆக உயர்த்தியது. அதாவது, ‘சிறப்பு வரி’யின் பங்கு சுமார் 10% உயர்த்தப்பட்டது. இதையே வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், வரி வருவாயில் மாநிலங்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டிய நிதி 10% குறைந்தது. அப்படி குறை க்கப்பட்ட வருவாயில் மாநிலங்களுக்கான நிதி 10% கூட்டப்பட்டது. அதற்கு இது சரியாகப் போய்விட்டது. இப்படியாக 14ஆவது ஆணையம் பரிந்துரைத்த 10% கூடுதல் நிதி மாநிலங்களின் வாய்க்கு எட்டவில்லை.

**இரண்டாம் கட்டம் பகிர்வு:**

ஒவ்வோர் ஆணையமும் நிறுவப்படும்போது அவை நிதியை எங்ஙனம் பங்கிட வேண்டும் என்பதற்கான அடிப்படை விதிமுறைகளை (Terms of ReferenceToR) ஒன்றிய அரசுதான் தீர்மானிக்கிறது. 15ஆவது நிதி ஆணையத்துக்கு ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட விதிமுறைகளில் (ToR) ஒன்றுதான் இப்போதைய பிரச்சினைகள் பலவற்றுக்கும் ஊற்றுக்கண்.

2011 மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில், மாநிலங்களுக்கு நிதியைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதுதான் சர்ச்சைக்குள்ளான அந்த விதிமுறை (ToR). அதற்கு முந்தைய ஆணையங்கள் 1971 மக்கள்தொகையைத்தான் கணக்கில் கொண்டன. மக்கள்தொகைக் கட்டுப்பாடு ஒரு பிரதான தேசியக் கொள்கையாக உருவெடுப்பதற்கு முன்னால், அந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது என்பதுதான் காரணம்.

இந்த இடத்தில் 2011க்கு முந்தைய 40 ஆண்டுகளின் மக்கள்தொகைப் பெருக்கத்தின் சில கூறுகளைப் பார்ப்பது மிகவும் அவசியம். 1971இல் இந்திய மக்கள்தொகை 54.8 கோடியாக இருந்தது. 2011இல் இது 121 கோடியாக உயர்ந்தது. 1971இல் மக்கள் தொகையில் உத்தரப் பிரதேசத்தின் வீதம் 16%ஆக இருந்தது. 2011இல் இது 16.5%ஆக உயர்ந்தது. இதே காலகட்டத்தில் பிஹாரின் மக்கள்தொகை 8.6%இலிருந்து 10.3%ஆக உயர்ந்தது.

அதாவது, சராசரி இந்திய மக்கள்தொகை கூடி

**மு.இராமநாதன்**
*எழுத்தாளர்,*



வந்த விகிதத்தைவிட உத்தரப் பிரதேசம், பிஹார் போன்ற வட மாநிலங்களின் மக்கள்தொகைப் பெருக்கம் அதிகமாக இருந்தது. இதே 40 ஆண்டுகளில் அனைத்துத் தென் மாநிலங்களின் ஒட்டுமொத்த வீதம் 24.7%இலிருந்து 17.8%ஆகக் குறைந்தது.

அதாவது, தென் மாநிலங்களின் மக்கள்தொகை அதிகரிக்கும் விகிதம் கணிசமாகக் குறைந்து வந்தது. மக்கள்தொகைக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தென் மாநிலங்கள் தீவிரமாக அமல்படுத்தியதுதான் காரணம். கூடவே, அவை மக்களின் கல்வியிலும் உடல்நலத்திலும் வேலைவாய்ப்பிலும் கவனம் செலுத்தின. இதுதான் தென் மாநிலங்கள் வளர்ந்து வருவதற்கான காரணம்.

**சொன்னதும் நடந்ததும்:** ஆகவே, 2011 மக்கள்தொகையின் அடிப்படையில் நிதி பங்கிடப்பட்டால் மக்கள்தொகையைக் கட்டுக்குள் வைத்திருக்கும் தென் மாநிலங்கள் தண்டிக்கப்படும் என்பதும், அவ்விதம் கட்டுப்படுத்தாத பல வட மாநிலங்கள் பலன் பெறும் என்பதும் எல்லோருக்கும் தெரிந்தே இருந்தது. எனவே, பல வளர்ந்த மாநிலங்கள் 15ஆவது நிதி ஆணையத்திடம் தங்கள் எதிர்ப்பைப் பதிவுசெய்தன.

அவர்களுக்கு ஆணையம் ஓர் உறுதிமொழி வழங்கியது. 2011 மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் மாநிலங்களுக்குப் புள்ளிகள் வழங்கப்படும். அதே வேளையில், மக்கள்தொகையைக் கட்டுப்படுத்திய மாநிலங்களுக்கு அதற்கேற்ற வகையில் புள்ளிகள் வழங்கப்படும். இரண்டையும் கணக்கில் கொண்டே நிதி பகிர்ந்தளிக்கப்படும். இந்த உறுதிமொழியைத் தென் மாநிலங்கள் நம்பின. ஆனால், நடந்தது வேறு.

15ஆவது நிதி ஆணையம் மக்கள்தொகைக் கட்டுப்பாட்டுக்கான அடிப்படை ஆண்டாக 1971ஐ அல்ல, 2011 மக்கள்தொகையை எடுத்துக்கொண்டது. இதனால், மக்கள்தொகையைக் கட்டுப்படுத்திய மாநிலங்களுக்கு எந்தப் பலனும் விளையவில்லை. மாறாக, அவை பெறும் நிதி வெகுவாகக் குறைந்தது.

மக்கள்தொகை அதிகமுள்ள பல வட மாநிலங்களோ அதிகப் பலன் பெற்றன. ஐந்து தென் மாநிலங்களுக்கும் சேர்த்து 13.7% நிதியை ஒதுக்கிய 15ஆவது நிதி ஆணையம், உத்தரப் பிரதேசம் எனும் ஒரு மாநிலத்துக்கு மட்டும் 17.94% நிதியை ஒதுக்கியது. இந்த அடிப்படையில்தான், நிதிநிலை அறிக்கையில், 2024-25ஆம் நிதியாண்டுக்கு ஐந்து தென் மாநிலங்களுக்கும் சேர்த்து ரூ.1,92,722 கோடியும் உத்தரப் பிரதேசத்துக்கு மட்டும் ரூ.2,18,816 கோடியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**பாரபட்சமா? -**

வரி வருவாயில் 42% மட்டுமே ஆணையத்தின் பரிந்துரைப்படி பகிர்ந்தளிக்கப்படுகிறது என்று பார்த்தோம். எஞ்சிய வருவாயில் ஒருபகுதியை ஒன்றிய அரசு மானியங்களாகவும் நிவாரணங்களாகவும் திட்டப் பணிகளுக்காகவும் மாநிலங்களுக்கு வழங்குகிறது. இதிலும் தாங்கள் வஞ்சிக்கப் படுவதாகத் தென் மாநிலங்கள் குமுறுகின்றன.

ஒரு புள்ளிவிவரத்தின்படி ஒன்றிய அரசுக்குத் செலுத்தும் ஒவ்வொரு ரூபாய்க்கும் 29 காசுகள் மட்டுமே திரும்பப் பெறுகிறது தமிழ்நாடு. அதே வேளையில், உத்தரப் பிரதேசம் ஒரு ரூபாய் செலுத்தி ரூ 2.73 பெறுகிறது; பிஹார் ரூ.7.06 பெறுகிறது. இது மக்கள்தொகையைக் கட்டுப்படுத்திய தென் மாநிலங்களுக்குத் தண்டனையாக அமைகிறது.

பல மேலை நாடுகளில் பாதுகாப்பு, அயலுறவு, ரயில்வே, பேரிடர் நிவாரணம், மானியங்கள் முதலானவை மட்டுமே ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. இந்தியா அந்த நிலையை எட்டுவது இப்போதைக்கு சாத்தியமல்ல.

**என்ன செய்யலாம்?** 16ஆவது நிதி ஆணையம் (2026-31) நிறுவப்பட்டுவிட்டது. ஒன்றிய அரசு புதிய ஆணையத்துக்கு வழங்கவிருக்கும் விதிமுறைகளில் (ToR) மீண்டும் 1971 மக்கள்தொகை அடிப்படையில் வரி வருவாய் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு வகைசெய்ய வேண்டும்.

வளர்ச்சி குன்றிய, மக்கள்தொகை மிகுந்த மாநிலங்களுக்கு அதிக நிதி வழங்கலாம். அது தென் மாநிலங்களின் வளர்ச்சியைப் பாதிக்காத வகையில் இருக்க வேண்டும். கூடவே, ஒன்றிய அரசு ‘சிறப்பு வரி’களைக் குறைத்து, மாநிலப் பங்கீட்டுக்கான நிதியை அதிகரிக்க வேண்டும். இவைதான் மக்கள் தொகையைக் கட்டுக்குள் கொண்டுவந்திருக்கும், வளர்ச்சிப் பாதை யில் முன்னேறி வரும் தென் மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு செய்யும் நீதியாக இருக்கும்.

நன்றி :
**‘தி இந்து தமிழ்திசை’**
13.02.2024

---

கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில்

## புதுக்கோட்டையில் இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டு தீர்மானம் விளக்க பொதுக்கூட்டம்!

### கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை!

*புதுக்கோட்டை, பிப். 15 -*

*புதுக்கோட்டை திலகர் திடலில் திமுக இளைஞர் அணி செயலாளரும் தமிழ் நாடு விளையாட்டு மேம் பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலினின் பிறந்தநாள் விழா மற்றும் தி.மு.க. இரண்டாவது இளைஞர் அணி மாநாட்டு விளக்கப் பொதுக்கூட்டம் நகர தி.மு.க. சார்பில் வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையில், நகரச் செயலாளர் செந்தில் வரவேற்பில் நடைபெற்றது இதில் பங்கேற்ற தி.மு.க.வின் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தி களை சந்தித்து பேசுகையில்:*

*சட்டப்பேரவையின் சபாநாயகர் குறித்து விமர்சனம் செய்யும் தமிழிசையால் தெலுங்கான போகவே முடியலை, ஆனால் தமிழ்நாட்டில் ஆளுநருக்கு உரிய மரியாதை அளித்து வருகிறோம், தமிழ்நாடு முதலமைச்சராக முன்னாள் முதலமைச்சர் கலைஞர் வந்ததிலிருந்து தமிழ்த்தாய் வாழ்த்தை உருவாக்கி அதனை முதலில் ஒலிக்க செய்வதை வழக்கமாக கொண்டு வருகிறோம்,*

*ஒரு ஆளுநர் உள்ளே வரும்போது விதிமுறைப்படி தேசிய கீதத்தை பேண்டு வாத்தியத்தின் மூலம் ஒலிக்க செய்துதான் உள்ளே சென்று அமர வைத்து, அதன் பின்பு தமிழ்த்தாய் வாழ்த்தை பாடினோம்.*

*இதில் என்ன குற்றம் உள்ளது, தேசிய கீதத்தில் இவ்வளவு பாசம் உள்ள கவர்னர் முதலில் என்ன சொன்னார், திராவிடம் என்ற சொல்லே இல்லை என்று சொன்னார்,*

*ரவீந்திரநாத் தாகூர் எழுதிய தேசிய கீதத்தில் திராவிட உச்சல வங்கா என்று வருகிறதே, தேசிய கீதத்தை பின்னாடி பாடுவதாக அவர் கோவித்துக் கொண்டு செல்கிறாரே, அதில் உள்ள திராவிடம் என்ற வார்த்தை மட்டும் ஏன் அவருக்கு கசக்கிறது. இதையெல்லாம் மக்கள் கேட்க மாட்டார்களா? தமிழ்நாட்டில் தான்*

*மொழிக்காக பல பேர் தீக்குளித்து உயிரை மாய்த்துக் கொண்டார்கள். அந்த தமிழ்த்தாய் வாழ்த்தை பாடக்கூடாது என்று எவன் சொன்னாலும் சரி, யார் சொன்னாலும் சரி, அவர்கள் இந்த சமுதாயத்திற்கு, இனத்திற்கு விரோதிகள் என்ற எண்ணம் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படும்,*

*1965 மொழிப் போராட்டம் மூலம் ஒரு எழிச்சி ஏற்பட்டதைப் போல இன்றைக்கு ஆளுநரின் போக்கு மீண்டும் 1965 க்கு திரும்பும் சூழலை ஏற்படுத்தி உள்ளது,*

*செந்தில் பாலாஜி ராஜினாமா செய்துள்ள விவகாரம் முதலமைச்சருக்கும் அமைச்சருக்கும் இடைப்பட்ட விவகாரமாக நான் கருதுகிறேன். ஆனால் பொன்முடி விவகாரத்தில்,*

*நீதிமன்ற உத்தரவு வந்தவுடனையே அவரது பதவி தானாகவே போய்விட்டது.*

*முரசொலி நில விவகாரத்தில் நான் தான் மனுதாரர், அந்த இடத்திற்கு மோசடி நடந்ததாக புகார் செய்தார்கள். அந்த ஆணையத்தின் தலைவராக இருந்த எல்.முருகன் தான் தற்போது பா.ஜ.க.வின் அமைச்சராக உள்ளார்,*

*முருகன் விசாரிக்கும் போது தான் நாங்கள் வழக்கு போட்டோம். முருகன் ஒரு கட்சியைச் சார்ந்தவர் என்பது தற்போது உண்மையாகிவிட்டது, தி.மு.க. எதை செய்தாலும் சரியாகத்தான் செய்யும் நாங்கள் போட்ட எல்லா வழத்திலும் நாங்கள் நிரூபித்து காட்டி உள்ளோம், சம்மந்தபட்ட இடம் யாருக்கு சொந்தமானது என்பது வெட்ட வெளியாக வெளியே வரப் போகிறது,*

*நான் எம்ஜிஆருடனும் பிரச்சாரத்திற்கு சென்றதால் தான் உதயநிதி ஸ்டாலினுக்கு கூடும் கூட்டத்தை எம்ஜிஆருடன் ஒப்பிட்டேன், எம்ஜிஆர் ஐ பார்த்து எப்படி பெண்கள் கூட்டம் கூடுமோ அதே போல தற்போது உதயநிதி ஸ்டாலினுக்கு கூட்டம் கூடுகிறது, நான் கலைஞர் கருணாநிதி, எம்ஜிஆர், தளபதி ஆகியோருடன் பிரச்சாரத்திற்கு சென்றவன் என்ற முறையில் தற்போது உதயநிதிக்கு கூடும் கூட்டத்தை எம்ஜிஆருடன் ஒப்பிட்டதாக அவர் கூறினார்.*

*நடிகர் விஜய்யின் அரசியல் வருகை குறித்த கேள்விக்கு பதில் அளித்த ஆர். எஸ்.பாரதி கூறுகையில்: செஞ்சிக்கோட்டை ஏறுகிறவர்கள் எல்லாம் தேசியவாதி ஆகிவிட முடியாது என்றார்.*

---

விக்கிரவாண்டி - தஞ்சாவூர் சாலைப் பணி: ஜூன் மாதத்திற்குள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர

## ஒன்றிய அரசை - மாநில நெடுஞ்சாலைத் துறை வலியுறுத்தும்!

### பேரவையில் - க.அன்பழகன் கேள்விக்கு - அமைச்சர் எ.வ.வேலு பதில்!

*சென்னை, பிப்.15 -*

*சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்த பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு, “விக்கிரவாண்டி - தஞ்சாவூர் சாலைப் பணியை விரைந்து முடித்து, ஜூன் மாதத்திற்குள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர ஒன்றிய அரசை, மாநில நெடுஞ்சாலைத் துறை வலியுறுத்தும்!’’ என்று குறிப்பிட்டார்.*

**க.அன்பழகன்:** *கும்பகோணம் மாநகராட்சி, இளமச்சிங்கபாளையம் மற்றும் தாராசுரம் பகுதிக்கு வடக்கே உள்ள கொத்தளம் ஒத்த தெருவில் சுமார் 1,500 சௌராஷ்டிரா குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பகுதியின் இடையிலே ஓடுகின்ற அரசளாறு மிகவும் பழமை வாய்ந்திருக்கிற ஒரு சாதாரண நடை*



*பாலமாக இருக்கிற அந்த இடத்தில், பொதுமக்கள் அதிகமாக பயணிக்கின்ற அந்தப் பாலத்தின்மீது கனரக வாகனங்கள் செல்வதற்கேற்றவாறு மாண்பிற்கினிய அமைச்சர் அவர்கள் ஒரு பாலம் அமைத்துத் தர வேண்டுமென்று அந்தப் பகுதியிலிருக்கிற வியாபாரிகள், நீண்ட நாட்களாக இருக்கிற மக்கள் கோரிக்கையை வைத்துக் கொண்டிக்கிறார்கள். எனவே, அமைச்சர் அவர்கள் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தருவார்களா?*

*அதேநேரத்தில், கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் விக்கிரவாண்டி தஞ்சாவூர் சாலையை ஜூன் 2024ல் முடித்துத் தருவேன் என்ற உறுதியை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். தற்போது, 2வது மாதம் ஆகிவிட்டது. இன்னும், மீதம் 3 மாதங்கள்தான் இருக்கின்றன. எனவே, அதற்கான பணிகள் விரைவாக முடி க்கப்படுமா?*

**அமைச்சர் எ.வ.வேலு:** *பாலம் அமைத்துத் தர வேண்டுமென்று சட்டமன்றப் பேரவை உறுப்பினர் க. அன்பழகன் இங்கே குறிப்பிட்டிருக்கிறார். அந்தப் பாலத்தைப் பொறுத்தளவுக்கு, இப்போது அவர்கள் என்னிடத்திலே கேட்கிற கேள்வி அல்லது கொடுக்கிற கடிதத்தை வைத்துக் கொண்டு, துறையினுடைய பொறியாளர்களை அனுப்பி, அங்கு சாத்தியக் கூறுகள் இருக்குமேயானால், இந்த நிதியாண்டிலே முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு, அந்தப் பாலம் கட்டுவதற்கு வேண்டிய ஏற்படுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*இன்னொன்று, விக்கிரவாண்டி- தஞ்சாவூர் சாலை என்பது எல்லோருக்கும் தெரிந்து விஷயம். அந்தச் சாலை முழுக்க, முழுக்க தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் போடப்படுகிறது. அதிலே மூன்று ஒப்பந்ததாரர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.*

*தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களைச் சந்திக்கின்றபோது அதுகுறித்து கடிதம் கொடுத்தார்கள். நானும் தொடர்ந்து ஒன்றிய அரசாங்கத்தை வலியுறுத்திக் கொண்டிருக்கிறேன். அதற்குப் பிறகு நிலுவையில் இருந்த பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.*

*உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்வியை மையமாக வைத்துக் கொண்டு, தொடர்ந்து அதிகாரிகளை வலியுறுத்தி, இந்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவதற்கு வேண்டிய முயற்சிகளை துறையின் சார்பாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.*



தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் மாநகராட்சி, 10 வது வார்டு, காசிராமன் தெருவில், 2022–2023 ஆம் ஆண்டிற்கான கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, ரூபாய் 16 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில், புதிதாக அமைக்கப்பட்ட பொது விநியோக மையக் கட்டிடத்தை, கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன், பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில், கும்பகோணம் மாநகராட்சி துணை மேயரும், மாநகர தி.மு.க. செயலாளருமான சு.ப.தமிழழகன், கும்பகோணம் ஊராட்சி ஒன்றிய துணைப் பெருந்தலைவரும் தி.கணேசன், மாநகராட்சி ஆணையர் இரா.லெட்சுமணன், வட்ட வழங்கல் அலுவலர் அருள்பிரகாசம், சந்திரசேகரபுரம் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை மேலாண் இயக்குனர் பழனியப்பன், மேலாளர் கோபிநாத், மாநகர தி.மு.க. நிர்வாகிகள் சு.வாசுதேவன், ப்ரியம் ஜெ.சசிதரன், எஸ்.இரவிச்சந்திரன், எஸ்.சிவானந்தம், பகுதி கழக செயலாளர்கள் இரா.செல்வராஜ், மு.கண்ணன், மாநகராட்சி மண்டல குழுத் தலைவர்கள் கே.என்.எஸ்.ஆசைதம்பி, ஜெ.மனோகரன், மாநகராட்சி பொறியாளர் லோகநாதன், மாநகராட்சி நகர் நல அலுவலர் க.ஆடல்அரசி, உதவி ஆணையர் சுரேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் டி.ஆர்.அனந்தராமன், ஆர்.முருகன், ஜெ.நடராஜன், சி.தமிழ்ச்செல்வி, வட்டச் செயலாளர்கள் திருமலை, அயன்ராஜ், சிவகணேஷ் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**குறிச்சி இரா. நாகராசன்**
**பிப்ரவரி 15 (2005)**



**கோவை மாவட்டம், குறிச்சி பேரூர் கழகமாக இருந்தபோது, சுந்தராபுரம் கிளைப் பொருளாளராக பணியாற்றத் தொடங்கி, பேரூர் ஒன்றிய அவைத் தலைவர், குறிச்சி பேரூர் செயலாளராகவும், பின்னர் குறிச்சி நகரமான பிறகு, நகரச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்டப் பொருளாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**குறிச்சி நகராட்சித் தலைவராக கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பாக பணியாற்றி அப்பகுதி மக்களின் மனதில் இடம் பிடித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**